காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

16—7—72

★

உள்ளே......

அண்ணாவைப் பற்றி...!
(அண்ணாவின் ஆசிரியர் பேட்டி)

★

அமைதி நிலவட்டும்!
(தலையங்கம்)

★

காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
(இலக்கியத் தொடர்க் கட்டுரை)

★

மெல்லிய காதல்!
(தொடர் கதை)

★

விலை 25 காசு

விலங்கென வாழுவதோ?

— மணிவேந்தன் —

வீரத் தமிழக நாட்டில் பிறந்தோம்
விலங்கென வாழுவ தோ?—நம்
தீரத் தினைச்சில தீய இனத்தவர்
தீய்க்க நினைப்பது வோ?

இங்குள்ள செல்வம் அனைத்தும் கொடியோர்
எடுத்துக் கொழுப்பது வோ?—அவர்
சிங்க மரபினர் தம்மை அடக்கிச்
சிரித்து மகிழுவ தோ?

பண்டைய நாளினில் பார்த்தவர் போற்றிட
பண்புடன் வாழ்ந்தவர் நாம்—இன்று
அண்டைய நாட்டினர் தூற்றிடக் கண்டும்
அவலமாய் வாழுவ தோ?

கன்னித் தமிழினத் தாய்மகிழ் வெய்திடும்
காட்சியைக் கண்டிடு வோம்—நம்
பொன்னி பொருநை விடுதலை நாட்டினில்
பொங்கிடக் கண்டிடு வோம்!

அண்ணுவைப்பற்றி...!

'என்னால் மறக்க முடியாத ஆசிரியர் இவர்' — என்று அறிஞர் அண்ணு அவர்களால் வெகுவாகப் பாராட்டப்பட்ட திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் (வயது - 70), செங்கை மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மட்டுமன்று; காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அறிஞர் அண்ணு அவர்களின் தலைமைத் தமிழாசிரியரும் ஆவார்.

பேட்டி ஆரம்பம்

'பள்ளிப் பருவத்தில் அண்ணு அவர்கள் எப்படி இருந்தார்? அவரிடம் பேச்சாற்றல், எழுத்தாற்றல் ஆகிய இரண்டும் எவ்வெவ்வாறு குடிகொண்டிருந்தன? இந்நாட்டையே கட்டி ஆளும் புகழ் மிக்க தலைவராகும் தகுதிக்கான அறிகுறிகள் அப்போதே அவரிடம் தென்பட்டனவா?'

அறியும் ஆவலுடன் ஆசிரியர் திலகம் திரு. திருஞான சம்பந்த முதலியாரை அணுகி விசாரிக்கிறேன். பேட்டி தொடங்குகிறது. நான் கேட்ட கேள்விகளும் ஆசிரியர் அளித்த பதில்களும் வருமாறு:

விலைஉயர்ந்த மாணிக்கம்— அண்ணு!

1. கேள்வி:- அந்நாளில் அண்ணு அவர்களைப் பற்றிய நினைவுகள் —ஏதேனும் கூற முடியுமா?

பதில்:- அப்போதெல்லாம் அண்ணு தலைவாரி பின்னல் போட்டுக் கொண்டுதான் இருப்பார். 'ரேக்லா' வண்டியில் வருவார். அதில் சோற்றுப் பொட்டலம் தொங்கிக் கொண்டிருக்கும். நெற்றியில் 'திரிசனம்' (சிவப்புக் கோடு) மட்டும் இட்டிருப்பார்.

தான் ஓட்டிவந்த வண்டியையும் மாட்டையும் பள்ளிக்கு முன்புள்ள அரச மரத்தடியில் கட்டிவிடுவார்—

2. கேள்வி:- அவருடைய அறிவாற்றலை அன்றே நீங்கள் கண்டு இருக்கிறீர்களா?

பதில்:- அவர் என்னிடம் 1926 - முதல் 1928 முடிய படித்தார் என்று நினைக்கிறேன். வகுப்பில் கடைசி பெஞ்சின் கோடியில்— ஜன்னல் பக்கமாக எப்போதும் உட்காருவது வழக்கம். நிரம்ப அடக்கமானவர் நடுத்தர மாணவர் என்றுதான் முதலில் அவரை எண்ணினேன். ஆனால் அது எவ்வளவு பெரிய தவறு என்று போகப் போக புரிந்து கொண்டேன்.

உண்மையிலேயே அவர், விலை மதிக்கமுடியாத மாணிக்கம் தான்!

பொருள் பொதிந்த வினுக்கள்

3. கேள்வி:- வகுப்பில் அடிக்கடி அவர் வினுக்கள் எழுப்புவது உண்டா?

பதில்:- சில மாணவர்களைப் போல அவர் அடிக்கடி அனுவசியமான கேள்விகள் கேட்டு, 'தொல்லை' கொடுக்கமாட்டார். ஆனுல், அவர் கேள்வி கேட்காமலும் இருந்து விடுவதில்லை.

அண்ணுவின் ஆசிரியர்

பேட்டி:

புலவர். சி. எஸ். பெருமாள்

அப்படி அவரால் கேட்கப்படும் கேள்விகள், நியாயமான— பொருள் பொதிந்த கேள்விகளாக இருப்பதை நான் பல முறை கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

முட்டையா? கூடா?

4. கேள்வி:- அப்படிப்பட்ட வினுக்களில் ஏதேனும் நினைவிருக்கிறதா? ஒன்றிரண்டு கூறுங்களேன்?

பதில்:- ஒருநாள் வகுப்பில் திருக்குறள் பாடம் நடந்துகொண்டிருக்கிறது. நிலையாமை' அதிகாரத்தில் வரும், 'குடம்பை தனித் தொழிய புள் பறந்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு'–என்னும் திருக்குறளுக்கு விரிவுரையாற்றிக் கொண்டிருந்தேன். மிகவும் தர்க்கத்துக்குரிய —நுட்பம் செறிந்த திருக்குறள் இது.

குடம்பை என்பதற்கு சரியான பொருள் முட்டையா? கூடா? என்றவர் கேட்டு, முட்டை என்று கூறும் பரிமேலழகர் உரைக்கு தக்க விளக்கம் அளிக்கச் செய்த பெருமை அண்ணு அவர்களையே சாரும் என்பேன்.

இன்னெரு சமயம், 'இன்ணு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' —என்று கூறிய திருவள்ளுவர், 'ஒருத்தற்கு ஒரு நாளை இன்பம்' என்று மட்டும் ஏன் கூற வேண்டும்? என்று கேட்டார், அண்ணு! சற்றுநேரம் அயர்ந்துவிட்டேன், நான்! எத்தனை நுட்பமான கேள்வி பாருங்கள்!

5. கேள்வி:- பள்ளிப் பருவத்திலேயே அவர் சீர்த்திருத்த மனப்பான்மை கொண்டிருந்தாரா?

பதில்:- அப்பழுக்கில்லாத சீர்த்திருத்த வாதி என்றே பழுத்த சமயவாதி என்றே அப்போது கூற முடியாது. ஆனுல் மூடபக்தியை மட்டும் வெறுத்தார் என்பது உண்மை. அதே சமயம் உண்மையான பக்திக்கு மதிப்பளிக்க அவர் தவறியதே இல்லை.

ஒருசமயம் நான் ஞாயிறு வழிபாட்டுக்காக காஞ்சிபுரம் புண்ணியகோட்டீசுவரன் கோயிலுக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள பிள்ளையார் சந்நிதி முன்பு அண்ணு படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

'என்னப்பா...?' என்றேன். 'பாடம் படிக்கிறேன் சார்!' என்றூர் அண்ணு!

6. கேள்வி:- அண்ணு அவர்களின் பேச்சாற்றல் பற்றி......?

பதில்:- மாணவர்கள் பெரும்பாலும் எழுதி வைத்துக் கொண்டு தான், மாணவர் மன்றத்தில் படித்து விடுவார்கள். இதுதான் வழக்கம். குறிப்பு வைத்துக் கொண்டு மேடையில் பேசிப் பழகவேண்டும் என்று நான் அடிக்கடி வற்புறுத்துவதுண்டு. ஆனுல் அண்ணுவோ, எவ்வித சிறு குறிப்புமின்றி தங்கு தடையின்றி பேசிவிடுவார். பேச்சென்ருல்...அது அண்ணுவின் பேச்சைத் தான் கேட்கவேண்டும். போட்டியில் பல பரிசுகளும் பெற்றிருக்கிருரே!

(13-ஆம் பக்கம் பார்க்க)



காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 16 (மலர் உள்பட) ஆறுமாத சந்தா ரூ. 8

மலர் 8 | 16—7—72 | இதழ் 53

"அமைதி நிலவட்டும்!"

பேரறிஞர் அண்ணாவும், அவரால் வடிவங் கொடுக்கப்பட்டு - வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகமும் எந்த அளவுக்கு இந்த நாட்டில் அரசியலை நாகரிகமானதாகவும் - அதனால் நலம் பயப்பதாகவும்; அறிவழியிலும் - அதனால் ஆக்கம் விளைப்பதாகவும் மாற்றியமைக்கப்பாடுபட்டு வெற்றி கண்டார்களோ, அந்த அளவுக்கு நாகரிகமான அரசியல் நடாத்தி வெற்றி காண இயலாதவர்கள் அந்த அரசியலைக் களங்கப்படுத்தவும் கறைபடுத்தவுமான முயற்சிகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கையாலாகாதவர்கள் வெற்றி பெறுவதற்குக் கயமைத்தனங்களே வழிகளாகக் காட்சியளிக்கின்றன போலும். "நெருப்புக் குச்சியால் விளக்கையும் ஏற்றலாம்; வீட்டையும் எரிக்கலாம்;

அதைப் பயன்படுத்துகிறவனுடைய பண்பைப் பொறுத்து ஒன்றனுடைய நன்மையும் தீமையும் அமைந்து விடுகிறது.

அதுபோல் மக்கள் மன்றத்தில் அரசியல் நடத்த வருகின்றவர்கள் தீயநோக்கங்களையே மூலதனமாக வைத்துக் கொண்டிருப்பது பாவேந்தர் பாரதிதாசன் சொன்னதுபோல் "திருந்தி வரும் நாட்டுக்குத் தீய எடுத்துக் காட்டாகவே' அமைந்து விடுகிறது.

'எந்தப் பிரச்சினையும் இல்லை' என்று சொல்லி எந்தக் காலமும் இருந்ததில்லை; எந்தத் தேசமும் இருந்ததில்லை, வளர்ந்துவரும் சமுதாய அமைப்பில் பிரச்சினைகள் நாள்தோறும் வளர்ந்துகொண்டுதான் இருக்கும்!

பிரச்சினைகள் தோன்றுவதற்குரிய மூலங்களைக் கண்டறிவதும், மேலும் தோன்றாமல் தடுப்பதும் அரசின் நீங்காத கடமைகள் ஆகும்.

அதுபோலவே பிரச்சினைகளை ஜனநாயக அமைப்பில் ஆளும் கட்சிக்குச் சுட்டிக் காட்டவும்; சூழ்ந்து - தீர்க்கும் வழியறிந்து எடுத்துக் கூறவும் எதிர்க்கட்சிகளுக்கு உரிமையும் கடமையும் உண்டு!

அப்படிப் பிரச்சினைகளைக் கூறும்போது நாகரிகமான வழியில், அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதைத் தவிர, வேறு உள்ளீடான நோக்கங்கள் எவையும் இல்லாத வகையில் எடுத்துக் கூறுவதே பொருத்தமுடையதாகும். மேலும் பிரச்சினைகளை வளர்ப்பதற்கு வழி செய்யாததுமாகும்!

அந்த வகையில் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி—முறையிட்டு; ஒப்புக் கொள்ளப்படாதபோது உரக்கச் சொல்லிக் கண்டித்து—மேலும் தீர்வு காணப்படாதபோது 'போராட்டத்தில்,' ஆனால், அமைதியான முறையில் ஈடுபடுவதே அரசியல் நெறிமுறைகளாகும். இத்தகைய அரசியல் நெறிமுறைகளால் தான் நாட்டின் நலங்கள் பாதுகாக்கப்படும்.

பல்கி வளர வாய்ப்பிருக்கும்!

இந்த நெறிமுறைகளில் அடிப்படையில்தான்—நியாயத்தின் பக்கத்தில்—நீதியின் பக்கத்தில் நின்று திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டில் அவ்வப்போது எழுந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காண முற்பட்டது என்பதைக் கடந்த கால நாட்டு அரசியல் நடப்புக்களை அறிந்தவர்களும் நடுநிலை மாறாத நற்பண்பினரும் நன்குணர முடியும்!

"எடுத்தேன், கவிழ்த்தேன்" என்று பேசுவதும், இல்லாத பிரச்சினைகளை இருப்பதாக இட்டுக் காட்டிக் கூறுவதும், இருக்கின்ற பிரச்சினையும் எளிதாகத் தீர்க்கப்படக் கூடியதாய் இருந்தும், தீர்வு காண முடியாததோ என்று எண்ணிடும் அளவுக்கு மேலும் பிரச்சினைகளைப் பெரிதாக்குவதும், கழக அரசியல் வரலாற்றில் காணமுடியாத தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கழகம், நாட்டில் உள்ள பிரச்சினைகளை மட்டுமே எடுத்துக் கூறி, ஏற்ற வகையில் விவேகத்தோடும், வேறு உள்நோக்கம் இன்றியும் அமைதியான—அறவழியில் போராட்டங்களை மட்டுமே நடத்தி அவற்றிற்குப் பரிகாரம் காணப் பாடுபட்டது.

ஆனால்,—இன்று......!

இல்லாத பிரச்சினைகளை இருப்பதாகக் கூறுவதும், இருக்கின்ற பிரச்சினையை விரிவாக்கிப் பெரிதாக்குவதும் அதனாலே சட்டத்திற்கும் அமைதிக்கும் பங்கம் விளைவிப்பதுமே 'அரசியல் அறம்' என்று கருதப்படுகிற அளவுக்கு அரசியல் நாகரிகம் தலைகீழாக மாறிப் போயிருக்கிறது!

"எரிகின்ற வீட்டிலே பிடுங்குவது இலாபம்" என்பதே இன்றைய சில அரசியல் கட்சிகளின் 'அறமாக' அமைந்து விட்டிருக்கிறது!

எந்தக் கட்சி மிகப் பெரிய சனநாயக பாரம்பரியத்தைக் கொண்ட கட்சிகளோ,—எந்தக் கட்சி அடக்குமுறை ஆதிக்கம், அராஜகம், ஆணவப் போக்கு ஆகியவற்றை அன்றிலிருந்து இன்றுவரை கட்டுப்பாடாக எதிர்த்து வருகின்றதோ அந்தக் கட்சி ஆட்சி நடாத்திடும் இன்றைய நாளிலே கூடச் சில பத்திரிக்கைகள் 'பத்திரிகா தர்மம் பறிபோய் விட்டது' என்று பாதையிலே வந்து படுத்துப் புரள்கின்றன!

பாவம்! என்ன செய்வது, இனிமேல்தான் நாம் பத்திரிகா தர்மத்தின் பால பாடங்களைப் படித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!

வேண்டுமென்றே—இருந்தாலும் வேதனை தரத்தக்க வகையில் நடந்துள்ள 'விவசாயப் போராட்டம்' கழக ஆட்சியைக் களங்கப்படுத்திட, இந்த ஆட்சியின் மாட்சியினைக் காணச் சகிக்காதவர்கள் எடுத்துக் கொண்ட கடைத்தரமான முயற்சியே யாகும்" தமிழகத்தில் வளர்ந்து—கழகத்தால் வாழ்வு பெற்று—தாயை விபச்சாரி என்று விளம்பரம் செய்யும் தரங்கெட்டவர்கள் நடாத்திடும் பாவ இதழ் விவசாயப் போராட்டம் நடந்த நாளில் "பேனர்" செய்தியாக ஒன்றை வெளியிட்டிருந்தது. அதைக் கொஞ்சம்

பூகத்தோடு கவனித்தவர்களுக்கு இன்றைய மாற்று முகாம் அரசியல் எப்படியிருக்கிறது என்பது புரியாமற் போகாது!

"அர்த்தால் முழு வெற்றி!

எட்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்"

இதுதான் "பேனர்ச் செய்தி!" தம்மையும் அறியாமல் போராட்டத்தின் சரியான உள்நோக்கம் என்ன என்பதை வழக்கறிவுப் பத்திரிக்கை வடிகட்டிக் காட்டியிருக்கிறது.

அர்த்தால்—போராட்டம் வெற்றி என்பது போராட்டத்திற்கு ஆதரவாக மக்கள் தாமாக முன் வந்து அதன் நியாயத்தை உணர்ந்து கடைகளை அடைத்துக் கொண்டனர்; பேருந்துகளை ஓட்டாமல் விடுத்தனர் என்பதாக அமைவதுதான். இதுதான் 'அர்த்தால்'—'போராட்டம்' என்பதை அப்பழுக்கில்லாமல் பயன்படுத்தும் நெறிகளாகும்.

ஆனால் "பத்திரிகைச் சுதந்திரப் பாசறையில்" இருந்து வெளிவரும் ஏட்டிற்கு அப்படி எல்லாம் பொருள் தெரியவில்லை. போராட்டத்தின் வெற்றி என்பதே 8 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுதான் என்றுதான் 'அது' பொருள் கொள்கிறது. ஓர் எட்டு பேராவது சுட்டுக் கொல்லப்பட வேண்டும், இறந்த பிணங்களை எடுத்துக் காட்டி இந்த ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதே இவர்களின் போராட்ட இலட்சியமாக இருந்ததால்தான் அர்த்தால் வெற்றிக்கு அடையாளமாக 8 பேர் சாவு என்று கணக்குப் போடுகிறது!

அவர்களுக்கு—ஆம்! ஆவி போன சடலங்களைக் காட்டி அரசியல் ஆதாயம் தேடுபவர்களுக்கு இது வேடிக்கையாக இருக்கலாம்.

ஆனால் நமக்கு? — பொறுப்புள்ள நமக்கு? வேதனை! — தீராத வேதனை தருகின்ற செய்தியாகத்தான் இருக்க முடியும்.

எதிர்க் கட்சி நடாத்திடும் ஏடுகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் இன்றுள்ள குறியே கழக அரசைக் கவிழ்க்க எப்படி எப்படி நெருக்கடிகளை உருவாக்கலாம் என்பதில்தான் இருக்கிறது என்பதற்கு இதைக் காட்டிலும் வேறென்ன எடுத்துக் காட்டு வேண்டும்!

டாக்டர் கலைஞர் அவர்கள் மானப் பிரச்சினை என்று எதையும் எடுத்துக் கொள்ளாத மக்கள் பிரச்சினைகளைக் கவனிக்கின்ற நிதான மிக்கவர்கள் என்பதனை 'விவசாயப் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

என்றாலும், எப்படியாவது இன்றைய ஆட்சியில் அமைதியாக நாடு நடப்பதனைக் கெடுக்கவேண்டும், அலைக்கழிக்க வேண்டும், அதிலே ஆதாயம் பெற வேண்டும் என்று இறை தேடிக் கொண்டிருந்தவர்கள் கட்டவிழ்த்த வன்முறையைத் தூண்டிவிட்டு—கலவரத்தை விளைவித்து — அங்காங்கே துப்பாக்கிச் சூடுகளைத் தவிர்க்க முடியாததாக்கி யிருக்கிருக்கிறார்கள். சில பல இடங்களில் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. தவிர்க்க முடியாத வகையில்!

ஆயினும் இறந்துவிட்ட உயிர்கள் விலை மதிக்கப்பட முடியாதவை! மீட்டுத் தர இயலாதவை! வேதனைப்படுகிறோம்! அவர்களை இழந்து பரிதவிக்கும் குடும்பத்தினரின் கண்ணீரோடு நம்முடைய கண்ணீரையும் கலந்து இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த மனிதாபிமான உணர்ச்சிகளைக் கவலையோடு தெரிவித்துக் கொள்கின்றோம்!

"இரத்தத்தின் இரத்தம், சதையின் சதை' என்று பேரறிஞர் அண்ணா சொன்னதுபோல் இரத்தத்தின் இரத்தமாய் சதையின் சதையாய்த் தாய்த் தமிழகத்தில் வாழ்ந்திருந்த அந்த உடன்பிறப்புக்களின் உயிர்களை உதாசீனப்படுத்திடும் அளவுக்கு 'உன்மத்தம் பிடித்தவர்கள் அல்லர்' நாம் என்பதை உலகம் ஒப்புக்கொள்ளும்.

கடைகளுக்கும் வீடுகளுக்கும் தீயிடுவது—கல்லெறிவது—காவலர்களைத் தாக்குவது,—பாலத்தைத் தகர்ப்பது—பாதைகளைத் தடுப்பது போன்ற வன்முறைகள் வரை முறையின்றிப் போகவே, மக்களுக்குப் பாதுகாப்புத் தரவும், வன்முறையைத் தவிர்க்கவும் அமைதியை நிலைநாட்டவுமான செயலையே அரசு மேற்கொண்டது; மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில்!

முதல்வர் அவர்கள் முந்திய ஆட்சியிலிருந்தோர் செய்யாத வகையில் உண்மையான ஜனநாயக உணர்வோடு தானே முன்வந்து, நிர்ப்பந்தம் இல்லாது நீதி விசாரணை நடத்த ஆணை பிறப்பித்திருப்பது அவரது "அறம் வழுவா" ஆட்சி முறையைக் காட்டுவதாகும்!

விவசாயிகள் சங்கத் தலைவர்களை அழைத்துக் கூடிப் பேசி முடிவெடுக்க எல்லாவிதமான முயற்சிகளையும் முதல்வர்கள் மேற்கொண்ட பின்னும் நியாயங்களைச் சந்திக்க மறுத்தவர்கள்தான் இத்தகைய சங்கடமான சூழ்நிலைக்குத் துரத்தியடித்திருக்கிறார்கள் என்பதனை நாட்டு நலத்தில் அக்கறை கொண்ட நல்லவர்கள் உணரவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா அரசியற் கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நடுநிலை தவறாமல் இதனைச் சிந்திக்கின்ற தூய உள்ளத்தைப் பெறவேண்டும்!

இத்தகைய தீயவினைகட்கு அடிப்படையாய் இருந்தவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாயினும் கேவலம் அரசியல் ஆதாயம் தேடும் எண்ணத்தைக் கொண்டிருப்பதைக் கைவிட்டுத் திருந்துதல் வேண்டும்!

ஏனையோர், அண்ணா வழியில் — அற வழியில்—நடந்துவரும் அரசுக்கு — நிகழ்ந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சிகளுக்குக் காரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற வகையில் பொறுப்புணர்ந்து ஆதரவாக நடந்துகொள்ளல் அவசர அவசியக் கடமையாகும்!

இதனை உணர்ந்து அரசின் ஆக்கப் பூர்வமான எல்லாவிதமான நல்ல நடவடிக்கைகளுக்கும் ஆதரவு தாருங்கள்! அமைதி நிலவட்டும்! *

ஆராய்ச்சிக் கட்டுரை:

"காப்பியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்"

(ச. சு. இளங்கோ, எம்.ஏ.,)

4. உலகின் பழம்பெருங் காப்பியங்கள்

அ. கிரேக்கம்:

மனித மாண்பினை வளப்படுத்தும் காவியங்கள் பழம்பெரும் நாகரிகங்கள் கொண்ட நாடுகளில் எங்ஙனம் பேணி வளர்க்கப்பட்டன என்பதைக் காண்போம்.

உலகின் முதன்மைக் காப்பியங்களால் இலியட், ஒடிசி பிறந்த நாடு கிரேக்கம். இக் காப்பியங்கள் தோன்றிய காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் கி. மு. 1050-250 என்கிறார்கள். இவை தமக்கு முன்னர் வழங்கிய கட்டுக் கதைகளையும் வாய்மொழிப் பாடல்களையும் தழுவிப் பின்னர் சிறந்த முறையில் தொகுக்கப்பட்டனவாம். கிரேக்கக் கட்டுக் கதைகளும், குட்டிக் காவியங்களும் பலப்பல தோன்றிப் பின்னர்க் கால வெள்ளத்தில் அழிவுற்றன. கிரேக்கப் புராணங்கள் யாவும் வரலாற்றின் எதிரொலியாக மட்டுமில்லாமல், சமய அறநெறி வாழ்வைச் சித்தரிக்கும் கதைகள் கொண்ட வரலாறுபோல விளங்குகின்றன. மேலும், இவை வாய்மொழி இலக்கியத்தின் அங்கங்களாக விளங்குவதோடு மட்டுமின்றிக் கிரேக்கக் கல்வி அறிவினையும் புராண வழி மரபையும் அறியத் துணை நிற்கும் கலைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன.

ஹோமர் தம்முடைய இரண்டு மிகப் பெரிய காவியங்களால் (இலியட், ஒடிசி) கடவுளரின் வரலாற்றைக் கூறுவதோடு அவர்தம் உருவங்கள், தன்மைகள், தொழில்கள் முதலியவற்றையும் "கொரடரிட்டஸ்" என்னும் வரலாற்று வல்லுநன் கூறியபடி வருணிக்கிறார். கிரேக்க வீரர்களின் சிறப்புகளைப் பற்றி "ஹோமர்" தம்முடைய காவியத்தில், "கடவுளின் நெறிகளைத் தாங்கி நிற்கும் கிரேக்கத் தலைவன் குருதி தோய்ந்த வீரனாகவும், துயரக் கறைபட்ட மறவனாகவும், கடவுளிடம் சில சமயம் அன்பு பெற்றவனாகவும் காட்சி அளிக்கின்றான்" என்பர்,

எடுத்துக் காட்டாக ஒரு சில அமைப்புகளைக் காண்போம். இலியட்டின் தொடக்கத்தில் ஹோமர் 'சீயாஸ்' இறை மட்டும் தனித்து நிற்பதாகவும், அழியா நிலையுடன் இருப்பதாகவும், 'அக்கிலயஸ்' தலைவர்கள் துன்பப்படுவதாகவும், அழிவுக்கு இலக்காவதாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். அக்கிலியஸ், எக்டர் போன்ற தலைவர்கள் இலியட் காப்பியத்தில் வருபவர்கள். இவர்களின் வீரச் செயல்களால் இவர்களின் நன்மையை நாடும் இறைவனிடமிருந்து இவர்கள் வரம் பெறுதலும் உண்டு. ஒடிசி காப்பியத்தில் ஹோமர், "தலைவன் மறச் செயலைவிட அவனின் வெற்றிப் புகழையும் அதன் பயனாக அவன் கொண்டுள்ள அடக்கம் என்னும் அணிகலன்களையும் அதிகம் புகழ்கின்றார்.

பெரும்பான்மையான கிரேக்கக் காப்பியங்கள் 'எர்குலிட்' போன்று அடிப் படையில், மனித மனமும், வீரப்பண்பும், வெற்றித் தன்மையும், இறைமைக் குணமும் உடைய வீரத் தலைவர்களைத்தான் தம்முடைய காவியங்களில் கதைத் தலைவனாகக் கொண்டிருக்கின்றன. எர்குலிஸ் தன்னுடைய எதிரிகளாய் வாழும் கீழ் உலக மிருகங்களுடன் போரிடுகின்றான். நரகத்தின் மூன்று தலைகளையுடைய காவல் நாயுடன் (Cerberus) அவன் சண்டையிடுகின்றான்; பாதி மனிதனும், பாதிக் குதிரை வடிவமும் உள்ள மிருகத்துடன் சண்டையிடுகின்றான்.

கிரேக்கத்தின் கீர்த்தியைப் புவனமறியச் செய்த பெருமை 'ஒடிப்பஸ்' என்ற துன்பவியல் காப்பியத்திலும் உண்டு. கலவர நிகழ்ச்சிகளையும் போர் மறத்தையும் நாம் அறிவதோடு அவர்கள் நீதிக்காகவும், நேர்மைக்காகவும் போரிட்ட முறைகளையும் காண்கின்றோம்1 காலத் தொன்மையால் இவ்வாறு உதிரிப் பூக்களாய்ச் சிதறிக் கிடந்த காப்பியங்களை அறிஞர் ஒருவர் தொகுத்து அதற்கு டிரோஜன் 'சைகில்' (Trogen Cycle) என்று பெயரிட்டு வைத்தார். ஏனெனில் மேற்குறிப்பிட்ட தொகுப்பில் வரும் காப்பியங்கள் எல்லாம் 'டிரோஜன்' போரைப்பற்றியே குறிப்பிடுகின்றன. இவற்றுடன் 'ஸ்டேசியஸ்' என்பவரால் எழுதப்பட்ட பதினொரு பாகங்கள் கொண்ட சைபீரியா (Cyperia) என்னும் நூல் முக்கியமானது. இதில் தெட்டீஸுக்கும் (Thetis) ஜூபிட்டருக்கும் (Jupiter) இடையே உள்ள ஒற்றுமையில்லாக் காதல் பிணக்குகளும், பெலியஸ் (Peleas) திருமண உறவும், தங்க ஆப்பிள் கதையும், பாரிசின் தீர்ப்பும், கிரேக்க வீரர்களின் தீரச் செயல்களும் டிரோஜன் போரில் முதல் ஒன்பதாண்டுச் சாதனையும் குறிக்கப்பட்டிருக்கின்றன.2

ஆ. ரோம்:

இலத்தீன் இலக்கியம் பெரும்பாலும் கிரேக்க இலக்கியத்திலிருந்து கடன் வாங்கப்பட்டது அல்லது மொழி பெயர்க்கப்பட்டது என்றால் மிகையாது. ரோம் வரலாற்றைப் பெரு முயற்சியுடன் எழுத

(1) Western Civilization - Parl Mackendride-P. 201-220. (2) The Book of the Epic - H. A. Guerber - P. 520-566.

அழுத பிள்ளை
சிரிக்குமாம்...
அமிர்தாஞ்சன்
கிரைப் மிக்ஸ்சர்

அஜீரணம், வாயு, தூக்க மின்மை, வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற குழந்தையின் உடல் கோளாறுகளை விரைவில் குணப்படுத்துகிறது.
பசியைத் தூண்டி, ஜீரணசக்தியைச் சீராக்கி, குழந்தையை ஆரோக்கியத்துடன் கொழுகொழு வென்று வளரச் செய்கிறது.

அமிர்தாஞ்சன்
லிமிடெட்

முயன்ற வரலாற்றுப் பேராசிரியன்மார் அதனை ஒரு காப்பிய வடிவிலே ஆக்கித் தந்துள்ளனர். பின்னர் நெவ்வியஸ் (Naevius) என்னும் புலவர் 'சைபீரியன் இலியட்' என்ற நூலையும், வீரக் காவியம் (Pumic War) சிலவற்றையும் தந்தார். ஆனால் அவற்றில் மிகச் சிலவே இன்று நமக்குக் கிடைக்கின்றன. 'ஹோஸ்டியஸ்' (Hostius) என்னும் புலவர் இஸ்டிரியா' (Isteria) காவியம் தந்தார். அதுவும் அழிந்து பட்டது. "லுக்ரோட்டியா"வினுடைய இயற்கையின் மேலான காப்பியம் இயற்பொருள் சார்ந்து விளங்குகின்றது. அடுத்துக் குறிப்பிடத் தக்கது அகஸ்டீன் காலத்துக் காப்பியங்களான பப்லீன்ஸ் கென்டியாஸ்வேரோ 'லூஸியாசி'யினுடைய காப்பியங்கள். இவைகளும் அழிந்தன. என்றாலும், ரோமக்காப்பியங்களில் தலையாய காப்பியமாக விளங்குவது வர்ஜில் (Vergil) தீட்டிய (Aeneid) எனியட் ஆகும். அதன் பின் வந்த சிறந்த காப்பியம் லூக்கான்ஸியுடைய 'பர்சாலியா' (Pharsalia). இது பத்து அங்கங்களைக் கொண்டது. 'சீசருக்கும்' 'பாம்பே'வுக்கும் ஏற்பட்ட பகைமைப் போராட்டங்களைக் குறிப்பிடுவது. மேற்குறிப்பிட்ட காப்பியங்கள் எல்லாம் வீரதீரச் செயல்களை விளக்குவனவானகும்".3

இ. தூரகிழக்கு நாடுகள் :

ஐரோப்பாக் கண்டத்தில் உருவான காப்பியம் போன்று சீனவில் உருவாகவில்லை. காதல் சுவை ததும்பும்படியான கதையொன்றைப் பேராசிரியர் 'ஈனேயூக்வான்' எழுதினர். உயர்வு நவிற்சி அணிகளையும், அண்டப் புளுகு நிறைந்த கட்டுக்கதைகளையும் இலக்கியத்தில் இடம் கொடாமல் தவிர்த்த சீன, ஒரு காலத்தில் தங்களைத் தெய்வப்பிறவி' (Heavenly birth) என்று உயர்வாக எண்ணிக் கொண்டிருந்தனர். பிற நாட்டவரைச் சீனர்கள் 'அந்நியப் பேய்கள்' (Foreign Devils) என்று பழித்தனர். இந்நிலையில் 'கான்பூசியஸ்' தோன்றி மக்களிடையில் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பினர். அதுவே அந் நாட்டில் காப்பியம் தோன்றாமைக்கும் தோன்றினும் நிலையாமைக்கும் காரணம் என்பர் அறிஞர்.4

ஈ. பாரத நாடு :

பாரத நாட்டின் மிகப் பழமையான காப்பியங்களாக மதிக்கப்படுபவை மகாபாரதமும், வால்மீகி இராமாயணமும் ஆகும். இவற்றைத் தவிர பதினெண் புராணங்களும் காப்பிய வரிசையில் சேர்த்து எண்ணப்படுகின்றன. முன்னர் இயம்பிய புராணங்கள் கற்பனைக் கதைகளாலும் கண்மூடி பழக்கங்களாலும் கருவாகி, உருவாகி வெளிவந்தன. மேலும், அவைகள் இந்துத் துறவிகளின் தவத்தையும், அறத்தையும் தெளிவாக அறிவிக்கின்றன. மேரு மலையில் நடந்த வீரதீரச் செயல்களை விளக்கி நின்றன. வால்மீகி இராமாயணமும், மகாபாரதமும் பிற்காலப் புலவர்களுக்குக் காவியம் பாட வழிகோலின.5

---

(3) The Book of the Epic-H. A. Guerber-P. 15-45. (4) History of the Far East-Paul H. Clyce Preface. (5) The Book of the Epic-H. A. Guerber P. 520-566.

இந்து மகாபாரதமும், இராமாயணமும் கி. மு. 400 முதல் கி. பி. 400 வரையுள்ள காலத்தில் தோன்றியன என்கிறார் அறிஞர் (விண்டர் நீட்ஸ்). மகாபாரதக் கதைக்குப் பிற்பட்டதே இராம சரிதம் என்பதில் ஐயமில்லை. இந்தியத் துணைக்கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் நடந்த நிகழ்ச்சிகளின் வரலாறுகள் பாரதமாகவும், வடகிழக்குப் பகுதியில் நடந்த சரித்திரம் இராமாயணமாகவும் தோன்றி இருத்தல் வேண்டும் என்பர் ஆய்வானர்.[6] இவ்விரு காப்பியங்களும் "அரசனுக்கும் சமய குருமார்களுக்கும் இடையே உள்ள தொடர்புகள், சமூகத்தின் சடங்கு முறைகள், மக்கள் இறைவனை நோக்கி வேண்டிய வழிபாட்டு முறைகள், சமூகத்தில் விளங்கி வந்த சட்டதிட்டங்கள் முதலியனவற்றை ஆராய முனைபவர்களுக்கும் கருத்துப் பெட்டகமாக நின்று நிலவுகின்றன" என்பர் அறிஞர்.[7]

முதற்கண் தோன்றிய காப்பியமான பாரதம் ஒழுங்காகவும், உறுதியாகவும் அமைக்கப்படா விட்டாலும், மிகப் பெரிய விழுமிய தனிச் சிறப்புடைய பல்வகைத் திறமும் கொண்டு கதை மதிப்புடையதாய் விளங்குகின்றது.[8] எனினும், அதே சமயத்தில் ஒரு காப்பியத்தில் இருக்கின்ற அளவை விட இக்காப்பியத்தில் அதிகமான அளவு இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்பதை மறக்கலாகாது.[9] இத்தகைய தன்மை கொண்ட மகாபாரதம் வியாச முனிவருடையதாகக் கூறப்பட்டாலும், வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த வெவ்வேறு ஆசிரியர்களாலும் தொகுப்பாளர்களாலும் யாக்கப்பட்டது என்பர் அறிஞர்.[10] இதை அடுத்துத் தோன்றிய "வால்மீகி இராமாயணம் தொன்மையானதும் மிகப் பெரியதும் ஆகும். 'ஏ. ஏ. மெக்டோமல்' இராமாயணத்தைக் 'கலைக் காப்பியம்' என்று குறிப்பிடுவதோடு, 'பிற்காலக் கலைக் காப்பியங்களுக்கு எல்லாம் இக்காப்பியமே தோற்றுவாயாக இருந்தது" என்றும் புகழ்வார்.[11] இதை அடுத்து வடநாட்டில் "அஸ்வகோஸ்வரர்" புத்தரின் வாழ்க்கையைக் காப்பியப் பாங்கில் படைத்தார்.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய மகா கவி 'காளிதாஸன்' அழகுமிகு காவியங்களை ஈந்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது இரகுவம்சம். இதில் இராமனின் (அயோத்தித் தலைவன்) வாழ்வையும், அவனுடைய முன்னோர்களின் வாழ்வையும், அரசியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறார். மேற்கூறிய காவியத்தில் வரும் உவமை, உருவகம், விளக்கங்கள் வருணனைகள் அவரது இன்னொரு நூலான குமார சம்பவத்தையும் மிஞ்சுகிறது. 'கவிராசர்' என்னும் புலவர் (கி. பி. 500) மகாபாரதத்தையும் வால்மீகி இராமாயணத்தையும் இணைத்துப் புதுக் காப்பியம் ஒன்றைப் படைத்தார்.[12]

உ. தமிழகம்:

கிரேக்கர், ரோமர், சீனர், ஆரியர் முதலியோரின் நாகரிகங்களோடு ஒப்பவைத்துக் கருதப்படுவது தமிழர் நாகரிகம். தமிழ் மொழியைக் குறித்து மேல் நாட்டு அறிஞர்களுள் ஒருவர், "தமிழ் மிகவும் பண்பட்ட மொழி, தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி"[13] என்கிறார். மற்றோர் அறிஞர், "ஆற்றல் மிக்கதாய்ச் சில சொற்களால் இயம்பிவந்த பல கருத்துகளைப் புலப்படுத்துவதில் தமிழ்மொழி போல் எம்மொழியும் இல்லை"[14] எனப் புகழ் பாடுகின்றார்.

இங்ஙனம் காலத்தை வென்று வாழ்ந்த கன்னித் தமிழ் மொழியில் கவினுறு இலக்கியங்கள் உண்டு. கதைப்பாட்டு என்னும் காப்பியம் இல்லை. அப்படி என்றால் "தமிழகத்தில் காப்பியமே இல்லையா?" என்ற கேள்விக்கு மேல்நாட்டு அறிஞர் ஒருவர், "பழம்பெரும் காலத்தில் தமிழில் படைக்கப்பட்ட காப்பியங்கள் ஒன்றும் இப்பொழுது கிடைக்கவில்லை. இதனால் காப்பியமே முன்பு இல்லை என்று முடிவு கட்டுவது அறிவுடைமையாகாது"[15] என்று விடையளிக்கின்றார்.

பேராசிரியர் சாட்விக் என்பார் உலகில் உள்ள காவியங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து வீர யுகத்தை நான்கு வகையாகப் பிரிப்பர். அவற்றுள் முதலாவதாக, 'வீரத்தில் வெற்றி கண்ட மாமன்னரைப் புகழ்ந்து பாடிய பாடாண்திணைப் பாடல்களும், பின்னர் அவர்களின் மறைவுக்கு வருந்திப் பாடிய கையறுநிலைப் பாடல்களும் தோன்றிக் காப்பியத்திற்குக் கருவாக அமைந்தன. இரண்டாவதாக, அரசர்களையும், அரண்மனை வாழ்வையும் பிரதிபலிக்கும் காப்பியங்கள் தோன்றின"[16] என்கிறார் சாட்விக். இக்கருத்துக்கு உறுதுணை அளிப்பது போலப் பேராசிரியர் "சி. எம். பௌரா" "வீர காவியம்" பாடாண்திணைப் பாடல்களின் தன்மையையும் கையறுநிலைப்பாடல்களின் தன்னமயையும்தான் அதன் ஆரம்பகாலத்தில் பெற்றிருந்தன" என்பார்.[17]

இதிலிருந்து வீரயுகத்தின் தொடக்ககாலம் தமிழகத்தில் நன்கு வளர்ந்து உள்ளமை வெளிப்படும்.

கையறுநிலைப் பாடல்களையும், பாடாண்திணைப் பாடல்களையும் அடிப்படையாகக்கொண்டு காப்பியம் தோன்றுமைக்குக் காரணம் என்ன? இவ்வினுவிற்குப் பேராசிரியர், 'சி. எம். பௌரா' பின்வருமாறு "ஒரு நிகழ்ச்சியின் அளவில் ஆழ்ந்து குறுகி நின்று அதைக் கடந்து புறநோக்குப் பெற்றுக் கற்பனை கலந்து விரிவு பெருமைதான் காரணம்" என்று மொழிகிறார்.[18]

கிரேக்கம், ரோம், பிரான்சு, இங்கிலாந்து, எகிப்து, பர்சியா, சுமேரியா, பாபிலோனியா, ஆசீரியா, பாலஸ்தீனம், செர்மனி ஆகிய நாடுகளில்

---

(6) காவிய காலம்-வையாபுரிப் பிள்ளை - ப. 277. (7) History of Civilization in Ancient India-Dutt Vol.1. P. 107-12. (8) The theory aad practice of Epieart in Indian Literature A. V. S. p. 273. (9) Article Published by Aaraaichi in July 1971. (10) காவிய காலம்-வையாபுரிப் பிள்ளை-பக். 276, (11) The theory and practice of Epic art in Indian Literature-A. V. Subramania Aiyar P. 274; Article published by Aaraaichi in July 71. (12) The Book of the Epic H. A. Guerber P. 520-556. (13) Max Muller. (14) Rev. Percival. (15) The foundation of Indian Poetry and their Historical Development J. Nobel P. 6. (16) The Heroic Age-H. Munro Chadwick P. 94. (17) Heroic Poetry-C. M. Bowra P. 60. (18) Heroic Poetry C. M. Bowra P. 10-12.

ஆரூர் வட்ட இலக்கிய மன்றம்,

அரூர். (தருமபுரி மாவட்டம்)

9-வது கவிதைப் போட்டியின் விபரம்.

1. கவிதை "வள்ளுவன் கண்ட காமம்" என்ற தலைப்பில் 40வரிக்குள் அடங்கியிருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு கவிதையுடனும் கட்டணமாக ரூபாய் ஒன்று தபால் தலையாகவோ, பணமாகவோ, போஸ்டல் ஆர்டராகவோ அனுப்ப வேண்டும்.
3. கவிதைக்கு மூன்று பரிசுகள் உண்டு.
4. கவிதை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 10—8—72.
5. கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

வித்துவான். **தே. வே. சந்தானம்,** தலைவர்,
அரூர் வட்ட இலக்கிய மன்றம், அரூர். (தருமபுரி மாவட்டம்.)

தாங்கள் போட்டியில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அரூர்,
5—7—1972. } வித்துவான் **தே. வே சந்தானம்,** (B.A.,) C. Lib. Sc;
தலைவர்.

புராணங்களும் இதிகாசங்களும் வீரப் பாடல்களுமே முதல் முதலில் தோன்றின.[19] ஆனால் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தெய்வீகக் கருத்துகளும் உயர்வு நவிற்சியணியும் புராணங்கள் கலந்த காப்பியம் தோன்றுமைக்குக் காரணம் நம் முன்னோர்கள் காப்பியத்தைக் காட்டிலும் தன்னுணர்வுப் பாடல்களையே பாடி மகிழ்ந்து ஒன்றிப் போயினமையேயாம். பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கள் இக்கருத்துக்கு உறுதி அளிக்கும் வண்ணம், "தாமும் தம்மைச் சார்ந்தோரும் பயன்பெறப் பாடல்களே போதும் என்று பழம்பெரும் புலவர்கள் எண்ணினர். வருங் கால மக்களுக்குப் பாமாலைகள் பயன்படுமா என்று அவர்கள் எண்ணவில்லை"[20] என எழுதுகின்றார்.

உலகில் காணப்படும் பல்வேறு காவியங்களை ஆய்ந்த திறனாய்வாளர் ஒருவர் "எண்ணிறந்த நாடுகளுக்கு இலியட், ஒடிசி போன்ற காப்பியங்களைப் பெறும் வாய்ப்பில்லை. இவற்றிற்குப் பதிலாக புனைந்துரை அதிசயமின்றிச் சிற்றரசர்களைப் புகழ்ந்து அம் மரபு நிகழ்ச்சிப் பாடல்களோடு அமைவுற வேண்டியிருந்தது"[21] என்பார். இக்கருத்துக்கு ஏற்ப, நம் பழம் பெரும் இலக்கியமாம் சங்கப்பாட்டில் பெரும் பாலும், "பெருமன்னன், குறுநில மன்னன், வள்ளல் முதலியோரின் வீரம், அருள், கொடை இவை கண்டு வியந்து பாடும் பாடாண்திணைப் ாடல்களே மிகுத்துள்ளன. மேட்டுக்குடி மக்களும் மாமன்னர்களும் இவ்வகைப் பாடல்களையே பெரிதும் விரும்பினார்கள். இந்நிலையைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை நன்கு விளக்கியுள்ளார். "இசையுடன் பாட்டுப் பாடுதற் கமைந்த பாணரும் புலவரும் மன்னர்களையே சார்ந்து அவர்களையே நம்பி வாழ்ந்தமையால், அவரது வீரம் பற்றிய பாடல்களையே பாடலாயினர். சான்று யாது எனக் கேட்கலாம். பத்துப் பாட்டிலும், புறநானூற்றிலும், பதிற்றுப் பத்திலும் வரும் ஆற்றுப் படைகளில் உட்பொதிந்த பொருள்களே தக்க சான்றாகும்"[22] என்று தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பழம் பெரும் தமிழகத்தில் பெருகியிருந்த மரபுப் புகழ்ச்சிப் பாடல்களையும் கையறு நிலைப் பாடல்களையும், பாடாண்திணைப் பாடல்களையும் இருவாகக் கொண்டு கொடை மடம் கொண்ட பாரியையோ, குணக்குன்று குமணனையோ, வல்வில் ஓரியையோ, செல்லும் இடமெல்லாம் வெற்றி குவித்த கரிகாலனையோ, பாட்டுடைத் தலைவர்களாகப் போற்றிக் காவியம் தோன்றாமைக்குக் காரணம் என்ன என்பதை நுணுகி ஆராய்ந்தால் ஓர் அரிய உண்மை நமக்குப் புலனாகிறது. "சீனநாகரிகம் நம்மைப்போல் பழம் பெரும் நாகரிகமாக இருந்தாலும், அந்நாட்டில் காவியங்கள் தோன்றவில்லையன்றோ? இதற்குக் காரணங்களை ஆராய்ந்தவர்கள் சீன நாகரிகம் அறிவாற்றல் மிக்கதாய் வளர்ந்ததே காரணம் என்கிறார்[23]

"அதுபோல் தமிழகமும் கற்பனையை விட அறிவு வளர்ச்சிக்கே முதன்மை கொடுத்தமையால் இங்கு காப்பியம் தோன்றாமல் போய்விட்டது. சங்க இலக்கியங்கள் மனித உணர்வுகளில் பிறந்தவை. சங்க காலக் கவிஞர்கள் மனித உணர்வுகளையும், இயற்கையின் வனப்புகளையும், நெருங்கிய பண்புகளாலும் இனிய தொடர்புகளாலும் நெய்துள்ளனர்".[24]

ஆகவே, இயற்கைக்கு மாறான கட்டுக்கதைகளின் மொத்த உருவமாம் காப்பியம் இங்குத் தோன்றவில்லை எனலாம்.

(வளரும்)

(19) A study in Epic Development T Myers P. 146 147. (20) இலக்கிய ஆராய்ச்சி-டாக்டர் மு. அ. ப. 93. (21) Enic and Romance-Wen. Ker P. 19. (22) காவிய காலம்-வையாபுரிப் பிள்ளை, ப. 66-67. (23) Heroic Poetry-C. M. Bowra P. 14 அ My country and My peonle Lin yutang P. 39. (24) The treatment of Nature in Sangam Literature Dr. M. Varadarajan P. 3.

"வாழ்த்தி வரவேற்கிறோம்."



காஞ்சியின் புதிய பொறுப்பாசிரியராக நாடறிந்த கவிஞர் புலமைப் பித்தன் அவர்கள் பொறுப்பேற்றுள்ள செய்தியை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம் "ஆயிரம் நிலவே வா" என்ற இனிமையான திரைப் படப் பாடலைக் கேட்டு இன்புறாத தமிழர் இருக்க இயலாது. அப்பாடலை இயற்றிய கவிஞர் புலமைப் பித்தன் அவர்கள் பல திரைப் படங்களுக்குத் தொடர்ந்து பாடல்கள் இயற்றித் திரைப் பாடல்களை நிலைத்த இலக்கியங்களாக்கும் புரட்சியைச் செய்து வருகிறார். "புரட்சித் தீ" "பாவேந்தர் பிள்ளைத் தமிழ்" போன்ற இவரது படைப்புக்கள் தமிழ்க் கவி உலகில் புதியதொரு எழுச்சியை உருவாக்கின எனில் மிகையாது.

மேலும் கவிஞர் அவர்கள் 1948 முதல் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இணைபிரியாத ஈடற்ற தொண்டராகப் பீடுநடை போடும் பகுத்தறிவுச் செம்மல் ஆவார். அறிஞர் அண்ணா அவர்களே கவிஞரது "புரட்சித் தீ" என்னும் படைப்பைப் பாராட்டி (1963 - இல்) சிறப்புரை அளித்துள்ளார்.

பாரிக்குப் பின் கபிலர் பாடிய பாடல்கள் எல்லாம் பாரியைப் பற்றியே அமைந்தன. மலையைப் பார்த்தாலும், நதியைப் பார்த்தாலும் அங்கே பாரியின் நினைவையே கண்ட கபிலரைப்போல் எந்தத் தலைப்பிலே கவி பாடச் சொன்னாலும் அறிஞர் அண்ணாவின் நினைவலைகளையே பாடும் திறன் வாய்ந்த, பாடிக்கொண்டிருக்கின்ற ஒரே கவிஞராகிய கவிஞர் புலமைப் பித்தன் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு "காஞ்சி" வெளி வருவது பொருத்தமான ஒன்றாகும். புதிய பொறுப்பாசிரியரைக் "காஞ்சி" உளமகிழ்வுடன் வரவேற்கின்றது. தெவிட்டாத தமிழ்ச் சுவை விருந்தை அன்பர்கள் தொடர்ந்து பெறலாம் அல்லவா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மெல்லிய காதல்

(புலவர். தி. நா. அறிவுஒளி)

"சிறந்த உணர்வுகள் ஒருவரிடம் அமைந்திருந்தால் அவை மற்றவர்க்கும் நுட்பமாகத் தொடரும். ஆம். அவளுடைய ஆழ்ந்த நாண உணர்வு புகழேந்தியின் அகத்தில் விளைகிறதோ என எண்ணினன்.

மாலை 'இசை விருந்து' நிகழ்ந்தது.

பெண்கள் பகுதியில் செல்வி அமர்ந்திருந்த இடத்திற்கு நேர் எதிரில் புகழேந்தி இடம் பிடித்தமர்ந்தான். உலகப் புலவர்கள் கூட்டத்திற்குள் ஒப்பற்று விளங்கும் பூங்குன்றனரைப் போல, அவ்விடத்தில் கூடியிருந்த அத்தனைப் பெண்களையும் விடச் செல்வியே அழகு முதலிய எல்லாப் பண்பு நலங்களிலும் ஒப்பற்று விளங்கினள். கோடி அகல் விளக்குகளின் முன் ஒரு கதிரவனைச் செல்வி பொலிந்தாள். இலைகள் நெருங்கி அடர்ந்திருக்கும் தாமரைப் பொய்கையில் பூத்த ஒரே அழகிய செந்தாமரை மலரைப் போல எழிலொளி வீசிய செல்வியின் தோற்றம் புகழேந்தியின் நெஞ்சில் உயிரோவியமானது.

'உனக்கும் எனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ—உலகில் பிறர்க்கு எய்தும் பொருத்தமோ?' என்னும் வடலூர் இராமலிங்க அடிகளாரின் தமிழிசைப் பாடலைப் பாடி ஊனுருக உணர்வுருகப் பாடிக் கொண்டிருந்தாள். புகழேந்தி தன்னுள்ளத்திற்கும் செல்விக்கும் உள்ள பொருத்தத்தை அப்பாடல் இசைப்பதாக எண்ணி மெய் சிலிர்த்துருகினன்.

இசையினிமை நினைந்து செல்வி முதலில் கைதட்டிப் பாராட்டினள். கூட்டத்தினர் கூடத் தட்டினர் எல்லாரும் கைதட்டுவதை நிறுத்திய பின்னரும் புகழேந்தி கைதட்டி எல்லாருடைய கவனத்தையும் தன்னையறியாமல் கவர்ந்தான். தன்னுணர்வடைந்து தலை குனிந்தான். செல்வியின் அழகு மயக்கம் தன்னை ஆட்டிவைப்பது கண்டு நாணினன். அவன் உள்ள மலர் கூம்பியது. அறிவையும், ஆண்மையையும் அடிமை கொண்டு செயலற்ற தாக்கி, வேறு ஓர் உணர்வு தன்னை இயக்குவது உணர்ந்து வருந்தினன்; இசை மன்றத்தை விட்டு வெளிவந்தான்.

இனிய நறுந்தென்றல் தண்ணென அவனுடலைத் தழுவியது. வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டே விருந்தினர் விடுதிக்குச் சென்றான். மென்காற்றைப்போல உள்ளம் மென்மையாக விளங்கியது. அருளாளர் நெஞ்சம்போல் நல்லமைதி அவன் நெஞ்சில் நிலவியது. எங்கெங்கும் பேரின்பம். அலை புரளுவது போல ஓர் உயரிய உணர்வு நிலையில் மிதந்தான். நாம் விரும்பும் பொருளையோ, உணர்வையோ நினைந்து நினைந்து தோய்வதில் உள்ளம் ஒரு தனி இன்பத்தை உணர்கிறது!

விருந்தினர் விடுதியில் புகழேந்தியின் ஆருயிர் நண்பன் முகிலன், தூங்கி எழுந்து முகங் கழுவி ஒப்பனை பூண்டு வெளிவந்தான்.

"என்ன முகிலா? தூக்கம் உன்னை விடவில்லையா? நீ தூக்கத்தை விடவில்லையா?"

"புகழேந்தி, இரண்டு நாள்களாகத் திருமண ஏற்பாடுகள் வேலைகளில் ஓடியாடி உழைத்தது ஒரே அலுப்பாகிவிட்டது உம்...வா காஞ்சி மாநகரை ஒரு சுற்றுலா வரலாம்."

"உம்"

நண்பர் இருவரும் காஞ்சிமா நகரின் அகன்ற தெருவில் நடக்கலாயினர். ஊர் சுற்றிவிட்டு இரவு ஒன்பது மணிக்குமேல் விருந்தினர் விடுதிக்கு வந்தனர்.

கூடத்தில் திருமணத்திற்கு வந்திருந்த பெண்கள் கூடியமர்ந்து குடும்பப் பேச்சு பேசிக்கொண்டிருந்தனர்.

செல்வி, தன் கையில் அழகிய குழந்தையை வைத்தவாறு கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்தாள். புகழேந்தியின் சுவையுள்ளம் 'இளம் பெண்களின் கைகளில் குழந்தை தவழும் ஓவியக் காட்சி எவ்வளவு அழகின்ப மளிக்கிறது!' என எண்ணியது.

செல்வி குழந்தையின் உச்சி மோந்தாள்; கொழு கொழுவென்றிருந்த மாம்பழக் கதுப்புக் கன்னத்தில் முத்தம் பதித்தாள். திடுமெனக் குழந்தை துள்ளியது. தலை நிமிர்ந்த செல்வி, புகழேந்தி தன்னையே நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு நாணி நகர்ந்தாள். குழந்தையைத் தோளில் சாய்த்துப் படுக்க வைத்துக்கொண்டு அவனை அவள் கடந்து சென்றபோது அவன் உணர்ச்சிமிக்க உள்ளம் உருகிக் கசிந்தது.

'ஏன் தன்னைக் கண்டதும் வெளியேறினள்? அவள் குழந்தைக்கு முத்தம் வைத்ததை ஓர்இளைஞன் பார்த்துவிட்டானே என்னும் நாணத்தினலா? ஒரு பெண்ணின் செயலை ஆடவன் ஆராய்வது பிடிக்காததாலா?—எண்ணப் பின்னல்களில் சிக்கித் தடுமாறிய புகழேந்தியை முகிலன் வந்து அழைத்துச் சென்றான்.

உணவு உண்ண வரிசையில் நண்பர் இருவரும் அமர்ந்தனர். சிரிப்பும் பேச்சும் ஆரவாரமாக அமைந்தது. மணமகன் வேலனும் மணமகள் கலையரசியும் தாங்களே விருந்து படைத்தனர். நண்பர்கள் அவர்களை நகையாடினர்.

யாரோ குனிந்து இலையில் உப்பு வைத்தனர். புகழேந்தி நிமிர்ந்தான். இரண்டு விண் மீன்கள் அவன் கண்களை மோதின!

"மனைவி உப்பைப் போன்றவள்" எனப் புகழேந்தி முணுமுணுத்தான். செல்வி நாணப் புன்னகையோடு தலை கவிழ்ந்து நகர்ந்து சென்றாள்.

அடுத்தவர் இலையில் உப்பு வைத்தாள். உடனே புகழேந்தி, "இன்னும் கொஞ்சம் உப்பு..." எனக் கேட்டான்

மேற்செல்ல முற்பட்ட செல்வி புகழேந்தியின் இலைமுன் வந்து நாணத்தோடு சற்று மிகுதியாக உப்பை வைத்தாள். அவன் முன் அவள் குனிந்த போது பின்னல் நழுவி முன்னால் சரிந்தது. செல்வி யின் வளை குலுங்கும் பொற்கை பின்னலைப் பின்புறம் தூக்கிப் போட்டது. புகழேந்தி, "உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினை" என அவளுக்கு மட்டும் கேட்குமாறு மெல்லக் கூறினான்.

அவனை நிமிர்ந்து நோக்கிவிட்டு அகன்றாள் செல்வி. எழில் மின்னும் செல்வியின் தாமரை முகத் தில் வியர்வைத்துளிகள் அரும்பின. செழுமையான செவ்விதழ்களும், பொன்னார்மேனியும், பொற்புள்ள பருவமும் அவன் கண்களின் வழிச்சென்று கருத்தில் பதிந்தன.

இன்பம் பூத்துச் சிரித்து எதிரில் வந்ததோ? அன்பின் இனிமையை வடித்தெடுத்து அதற்கு அழகென்று பெயரிட்டு இங்கே விருந்து படைக்க ஏவிவிட்டார்களோ? குறுந்தொகை நடை நடந்து நற்றிணை நகை சிந்தி நெடுந்தொகை நலமெலாம் ஏந்திவந்த ஏந்திழை நெஞ்சமென்னும் நாட்டில் நிலையான ஆட்சிபுரியத் தொடங்கிவிட்டாளே! என எண்ணி ஏங்கினான் புகழேந்தி.

அந்த அழகிய அமிழ்த உதடுகளில் மின்னிய ஒளிச்சுடர் அவன் மனத்திரையில் நிழற்படமாகப் பதிந்தது. தன்னை மறந்த நிலையில் மயங்கி உட்கார்ந் திருந்தான் புகழேந்தி. அருகில் சாப்பிட்டுக்கொண் டிருந்த முகிலன், "புகழேந்தி, சாப்பாடு இறங்க வில்லையா? பேசாமல் எழுந்து கை கழுவிக்கொள். இல்லாவிட்டால் வயிறு கெட்டுவிடும்" என்றான். புகழேந்தி அமைதியாக எழுந்து தோட்டத்திற்குச் சென்றான்.

தோட்ட வாயிற்படியருகில் பெரிய குண்டா னில் நீர் வைக்கப்பட்டிருந்தது. செல்வி சிறிய குண்டு செம்பில் நீர் முகந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். அவளிடம் நீர் பெற்றுக் கை கழுவிக் கொண்டான். அவள் மிக அருகில் நிற்கும்போது நிமிர்ந்து நோக்க வும் அவனுக்குத் துணிவில்லை. மனம் மிகப் பொல் லாதது. தொலைவிலிருக்கும்போது உள்ளத்துக்கு இருக்கும் அஞ்சாமை பெண்ணின் அருகில் குறைந்து விடுகிறது.

புகழேந்தி வாயிற்படியைக் கடக்கும்போது அவன் கால் படிக்கட்டில் 'டக்'கென்று இடித்தது. 'ஆ' என்று வலிபொறுக்காமல் கத்திவிட்டான். அவனருகில் வந்த செல்வி மருண்டு பரபரப்போடு அவனருகில் நோக்கினாள். அவன் துன்பம் அவள் நெஞ்சைத் தொட்டதோ? ஒருமுறை அவளை நோக்கினான். அந்தக் கணம் அவன் கால்வலிகூட மறைந்துவிட்ட தாக உணர்ந்தான். அவள் பார்வை மருந்தே அவனுக்கு ஆறுதலளிக்கப் போதியதாயிருந்தது! மெல்ல நடந்து தெருத் திண்ணைக்கு வந்தமர்ந்தான். திண்ணையில் பாய் விரிக்கப்பட்டு வெற்றிலைப் பாக்குத் தட்டுகள் வைக்கப்பெற்றிருந்தன.

முகிலன் வெற்றிலைப்பாக்கு போட்டுக்கொண் டான். நண்பனையும் போடுமாறு கூறினான். புகழேந்தி வேண்டாவென்று மறுத்துவிட்டுத் திண்ணையில் அமர்ந்தபடி பெரியவர்களின் பேச்சுக்களைக் கவனித் துக்கொண்டிருந்தான். ஒரு சிறுமி அவனருகில் வந்து அமர்ந்து வெற்றிலை போடலானாள். அவளின் சிறிய அழகிய கைகள் வெற்றிலைக் காம்பைக் கிள்ளி, நரம்பை நீக்கிச் சுண்ணாம்பைத் தடவி, ஒழுங்காக மடித்துக் கைவிரல்களினிடையில் செருகிக்கொண்டு ஒவ்வொன்றாக வாயில் இட்டு மெல்லலானாள். அவள் செயல் புகழேந்திக்குச் சிரிப்பை மூட்டியது. அவள் காதருகில் குனிந்து, "பாப்பா! உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" என்று கேட்டான். அவனை ஏற இறங்க ஒருமுறை பார்த்துவிட்டு உடனே எழுந்து அப்பால் சென்றாள் அச் சிறுமி. அவள் முகத்தில் நாணத்தின் நிழல் பரவியிருந்தது.

உள்ளேயிருந்து வந்த ஒருவர், 'சந்தன நலுங்கு' வைக்கப் போகிறார்கள் என்று கூறினார். அந்த விளையாட்டைக் காண விரும்பி நடை வழியாகப் புகழேந்தி உள்ளே சென்றான். அவ்வழியில் வாயிற் படியில் சாய்ந்தவாறு செல்வி நின்றபடி ஏதோ பகற் கனவில் ஆழ்ந்திருந்தாள். அவள் கை விரல்கள் கன்னத்தில் விளையாடிக் கொண்டிருந்தன. அவன் வருவதைக் கண்டு வழிவிட்டு விலகி நின்றவள் அடக்கமாக நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டு வேறு புறம் தலையைத் திருப்பிக் கொண்டாள். அவனுள் ளத்தில் எழுந்த வியப்பான குறுகுறுப்பு அவனுக்குப் புதுமையாக இருந்தது. உள்ளே சென்றான். பெண் களே அங்கே குழுமியிருந்து கொட்டமடிக்கக் கண்டான். ஆகவே திரும்பி விட்டான். வரும் போதும் அவளழகு முகத்தை அள்ளியுண்டபடி வந்தான். அவள் அவனை அமைதியாக நோக்கி மெல்லச் சிரித்தாள். புகழேந்தியும் சிரித்தான்.

வெளிப் பந்தலில் போடப்பட்டிருந்த நாற்காலி



ஒன்றில் அமர்ந்து செய்தித்தாளைப் புரட்டினுன். அப்போது ஒரு பையன் ஓடிவந்து, "மாமா," என்றழைத்தான். பையன் யாரென அறியாத புகழேந்தி, பையனின் கவர்ச்சிமிக்க அழகிய முகத்தில் மயங்கி, அவனை அருகில் இழுத்து அணைத்தபடி, "நீ யாருடா கண்ணு?" என வினவினுன்.

"அறிவுடைநம்பி நான்தான். அப்பா...வந்து... உங்களை கூப்பிட்டுவரச் சொன்னுங்க" எனக் குதலை மொழியில் கொஞ்சிப் பேசினுன்.

சிறுவன் பேச்சு புகழேந்திக்குச் சிரிப்பை மூட்டியது. பையனின் தூய உடைகளும், கட்டுப்பாடான தோற்றமும் அவனைக் கவர்ந்தன.

"உங்கள் அப்பா யாரும்மா கண்ணு?" என மேலும் கேட்டான்.

"வா'ங்கோ. காட்டறேன். மெத்தை மேலே இருக்காரு." எனக் கையைப்பற்றி இழுத்தான். அவனைத் தூக்கிக்கொண்டு வீட்டினுள் சென்றுன். கூடத்தில் சுவர் ஓரமாக ஒரு கிழவியிடம் செல்வி ஏதோ பேசிச் சிரிப்பதைப் புகழேந்தி கண்டான்.

செல்வி இவர்களைப் பார்த்ததும் பரபரப்புற்றுள். சற்று முன்வந்து, "நம்பி!" எனக் கண்டிப்புக் குரலில் விளித்தாள்.

"என்ன அக்கா?" எனக் கத்திச் சிரித்த அறிவுடைநம்பி அவளை நோக்கித் தாவினுன். அவளிடம் சிறுவனைக் கொடுப்பதா, கூடாதா? என எண்ணித் தயங்கியபடி புகழேந்தி நின்றுன். அவளும் கைகளை நீட்டினுள். குறும்புக்காரச் சிறுவன், "ஊஉம்...... நான் வரமாட்டேன். மாமாவை அப்பாகிட்டே அழைத்துப் போறேன்" எனச் சிரித்தபடி கூறினுன்.

செல்வி நீட்டிய கைகளைப் பின்னுக்கிழுக்காமல், "நம்பி, கீழே இறங்கு. நல்ல சட்டை அழுக்காகி விடும்." என்று கூறி வலிய அவனை வாங்கிக் கொண்டாள். அங்கே நிற்க விரும்பாத புகழேந்தி மேலே நடந்தான். உடனே அறிவுடைநம்பி, "மாமா, நான் வரவேணுமா?" என்றுன். திரும்பிய புகழேந்தி, "நம்பி, உன் நல்ல சட்டை அழுக்காகிவிடும்" என்றுன் புன்னகையோடு.

ஒருகணம் செல்வியின் ஆற்றல்மிக்க கூரிய பார்வை புகழேந்தியின் நேரிய பார்வையைத் தாக்கித் தடுமாறி நழுவித் தாழ்ந்தது. அறிவுடைநம்பியைக் கீழே நிற்கவைத்த செல்வி, "தம்பி, அவருடைய சட்டை அழுக்காகிவிடுமே! அவர் கையைப் பிடித்துக் கொண்டுபோ" என்றுள். உடனே சடாரெனப் பின்புறம் திரும்பி அகன்றுள்.

அறிவுடைநம்பி, புகழேந்தியின் கையைப் பிடித்துக்கொண்டு மாடிக்குச் சென்றுன். இரண்டாம் மாடி மொட்டை மாடி அங்கே ஒரு பாயில் இரண்டு பெரியவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நம்பி, "அப்பா!" எனக் கூவியபடி ஓடிச்சென்று சற்று இளமையான தோற்றமுடைய அதிகமானின் மடிமீது அமர்ந்தான். அவர்களிருவரும் "வாருங்கள். உட்காருங்கள்" என அவனை வரவேற்றனர். சிரித்தவாறே புகழேந்தி அவர்கள் எதிரில் அடக்கமாக அமர்ந்தான்.

வேலனின் தந்தையார் கண்ணப்பர், "இவர்தான் புகழேந்தி. ஆணையாளராக வேலை பார்க்கிறுர்."

நடமாடும் பல்கலைக் கழகம்!—தென்றல்
நடை.அவர் பேச்சிலே பழகும்!!
நெடுநாட்கள் அன்னவர் வாழ்க!—நாளும்
நிறைவான புகழ்வந்து சூழ்க!!

—கவிஞர் புலமைப்பித்தன்

என்று அதிகமானுக்கு அறிமுகப்படுத்தினுர். பிறகு, "புகழேந்தி, இவர் பெயர் அதிகமான். நூல்நிலைய மேற்பார்வையாளராகப் பணியாற்றுகிறுர். உன்னைப் பற்றிப் பேச்சு வந்தது. அறிமுகப்படுத்தினேன்." என்றுர் கண்ணப்பர். 'வணக்கம்' என அதிகமானை வணங்கினுன் புகழேந்தி. அவரும் வணங்கினுர்.

கண்ணப்பர், "இவருடைய தகப்பனுர் ஒப்பிலழகர் வயதாகிவிடவே வீட்டோடு இருக்கிறுர். ஒரு காலத்தில் செல்வச் செழிப்போடு வளமாக வாழ்ந்த குடும்பம். இடையில் நலிந்துவிட்டது. இனிமேல் புகழேந்தி தலையெடுத்துத்தான் பழைய நிலைமையை உண்டாக்கவேண்டும்" என விளக்கினுர்.

அதிகமான், "செல்வச் செழிப்பை மட்டும் வைத்துக் குடும்பத்தை மதிப்பதோ, பாராட்டுவதோ அறிவுடைமையல்ல. அது எனக்குப் பிடிப்பதில்லை. ஒரு குடியின் உயர்வை அக்குடியின் அறிவுவளம், பண்புவளம், மனவளம், ஒழுக்க—வழக்க முறைகளின் வளம் ஆகியவைகளைக் கொண்டே மதித்துப் பாராட்டவேண்டும்" என்றுர். அவருடைய முதல் பேச்சே புகழேந்தியின் உள்ளத்தைக் கவர்ந்தது. அக்கருத்து கல்வெட்டாக அவனகத்தில் பதிந்தது. அவரை நிமிர்ந்து நோக்கினுன்.

படிய வாரிவிடப்பட்ட கரிய தலைமயிர் அவர் தனி வாழ்வின் கட்டுப்பாட்டை விளம்புவதாகத் தோன்றியது. தெளிந்த நீரைப்போல அமைதி ஒளிவீசிய கண்களும், அன்றலர்ந்த மலர் போன்ற அழகிய முகமும், பெருந்தன்மை கலந்த பொலிவும், ஒழுக்கத்தின் மேன்மையால் அமைந்த ஒப்பற்ற கவர்ச்சியும் புகழேந்தியின் உள்ளத்தைக் கவர்ந்தன.

"உங்கள் பணி கடுமையானதாக இருக்குமே?" என்று அதிகமான் வினவினுர்.

"ஆமாம். ஆனுல், விரைவில் முன்னேறும் வாய்ப்பிருக்கிறதே. இந்த ஆண்டிலேனும், அடுத்த ஆண்டிலேனும் மாவட்ட ஆய்வாளராக உயர்வு கிடைக்கும் என எண்ணுகிறேன்" என்று புகழேந்தி விடையளித்தான்.

(தொடரும்)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிவும் பண்பும்

7. கேள்வி:- பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவரைச் சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?

பதில்:- அந்த நல்வாய்ப்பு எனக்கு நேரவில்லை. என்றாலும் அவரே என்னைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது — 1962 பொதுத் தேர்தலின் போதுதான்!

தேர்தலில் அண்ணா வீடு வீடாக ஓட்டுக்கேட்டுக்கொண்டு வந்தார். 'யாரும் உள்ளே வரா தீர்கள்...நான் மட்டும் போய் வருகிறேன்...என் தமிழ் வாத்தியார் வீடு!'—என்ற 'உரிமைக் குரல்' கேட்டு வெளிவந்தேன், ஆச்சரியத்தோடு. அண்ணா புன் முறுவல் தவழ, 'நான் வந்த காரணம் உங்களுக்கு தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்!' —என்று கேட்டுக் கொண்டதற்கு, 'அதற்கு மாறுதலே இல்லை' என்று வாக்களித்து வரவேற்றேன்.

'மற்றவர்களையும் போடச் செய்யுங்கள்!' — என்று மேலும் அவர் கேட்டுக் கொண்டபோது இருந்த பணிவு...! என்னால் மறக்க முடியாது!

8. கேள்வி:- அண்ணா முதலமைச்சர் ஆனதும், நேரில் சென்று பார்த்தீர்களா?

பதில்:- நேரில் போய் பார்க்க விருப்பம்தான். ஆனால் என் உடல் நிலை சரியில்லாததால், அவருக்கு வாழ்த்துக்கூறி பிரசாதத்துடன் தபால் அனுப்பினேன்.

9. கேள்வி:- அதன் பிறகு...?

பதில்:- மாவட்ட ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் குறைகளைத் தெரிவித்துக் கொள்ள, ஒரு சமயம் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். வீட்டின் உள்ளேயும் வெளியேயும் ஒரே கூட்டம்! அதிகாரிகளும் பிரமுகர்களும் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள். நானோ, வெளிப்புறத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து இருந்தேன். 'எப்படி பார்ப்பது?' என்று ஒன்றும் புரியாமல் யோசித்துக் கொண்டு இருந்தேன்.

'சார்!'—என்னும் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். திரு. சி. வி. இராசகோபால் (எம். - எல், சி) நின்றிருந்தார்.

'உங்களுக்கு என்னத்துக்கு சீட்டு? யார் இருக்கிறார்கள். உங்களைத் தடுத்து நிறுத்த?'— என்று கூறி, அண்ணாவிடம் அழைத்து சென்றார்.

'வாங்க ... வாங்க......இப்படி உட்காருங்க' என்ற அண்ணாவுக்கு, 'சரியப்பா...நீங்க உட்காருங்க முதலில்...!' என்றேன் நான்.

அண்ணா சிரித்துக்கொண்டே, 'சார்...வாத்தியார் உட்கார்ந்தால்தானே மாணவன் உட்கார ......!' என்று கூறி, என்னை உட்காரச் செய்துவிட்டாரே... இதெல்லாம் எனக்கு எத்தனைப் பெருமிதமாக இருக்கிறது தெரியுமா?

மணி இழந்த நாகம்போல்...!

10. கேள்வி:- மொத்தத்தில்—உங்கள் மாணவரைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பதில்:- 'மாணவர்'—என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்தவர்— அறிஞர் அண்ணா அவர்கள் தான்! எத்தனை அடக்கம், அன்பு, அறிவாற்றல்...! மணி இழந்த நாகம்போல் அவரில்லாமல் அவதிப்படுவதை என்னவென்று சொல்ல...? *

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவே கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்-நெசவோ நெஞ்சையள்ளும்

★ குர்தாக்கள்
★ பெல்ட் பாட்டம்கள்
★ லுங்கிகள்
★ சேலைகள்
★ உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற வர்ணஜால ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ் சகாயமான விலை! ஆதாயமான உழைப்பு!
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கப் லிட்.
(பாலசுந்தரம் பில்டிங்ஸ்)
எழும்பூர் :: சென்னை - 8.

இதய வீணை

செல்வி. உதயா, எம். ஏ.,

★

புத்தம் புதிதாய்த் தந்தான் இறைவன் இதய வீணையினை!
சித்தம் தெளிக என்றே ஒதுக்கி வைத்தேன் மூலையிலே!
நித்தம் நித்தம் இன்னிசை எழுப்ப நினைந்த எண்ணங்கள்
அத்தனை யும்பா ழாகத் தூசு படிந்தது வீணையிலே!

காத்துக் கிடந்த காலம் கோடிக் கனவாய்க் கழிந்ததுவே
பூத்துக் குலுங்கும் கோலம் இன்று நாசம் உற்றதுவே
சேர்த்துக் குவித்த இசையின் இன்பம் சேதம் ஆயினதே
பார்த்துப் பார்த்துப் பயனும் பதுங்கிப் பறந்து போயினதே

ஏற்ற இசையில் சோக கீதச் சுருதி திரட்டவே
சாற்றிய பாழும் வீணை தேடி சுமந்து கொணர்ந்ததே!
போற்றுங் கானம் மீட்ட முனைந்து துடித்து நிற்கவே!
ஆற்றல் அற்ற நரம்பும் இற்று அறுந்து சிதைந்ததே!

* * *

சிதைந்த நரம்பும் செகத்தில் சேரும் நாளும் வாராதோ!
புதைந்த இதயம் புகுந்த சோக ராகம் தீராதோ!
இதய வீணையின் இற்ற நரம்பும் என்றும் சேராதோ!
உதய கீதம் கேட்குங் காலம் உலகில் வாராதோ?

நொந்து மனம் நோகாதே!

— கவிஞர். கலைச்சுந்தரம் —

எடுப்பு

வந்து நான் என்ன செய்வேன்!
நொந்து — மனம் நோகாதே! (வந்து...)

முடிப்பு

விரித்த கருங்குழலும்
வேலின் விழியழகும்
மூன்றும் பிறைநுதலும்
முக்கனி இதழ்வாயும்
வட்ட முழுநிலவில்
வாவென் றழைத்தாலும் (வந்து...)

சிரித்த முகம்காட்டி
செவ்வல்லி கரம்நீட்டி
செங்கரும்புச் சாறள்ளி
சிற்றிடை தள்ளாட
விரித்த பஞ்சணையில்
வாவென் றழைத்தாலும் (வந்து...)

நாணத்தின் நீரோடையில்
நழுவிவிழும் மேலாடையை
எடுத்து மறைக்காமல்
என்னென்றும் பாராமல்
ஏக்கத்தோ டெனைப்பார்த்து
விழியால் அழைத்தாலும் (வந்து...)

அன்னையின் கட்டளையை
அமுதமாய் நினைப்பவன்நான்
பிஞ்சு மனங்களெல்லாம்
பேராவல் கொள்ளும்வண்ணம்
அஞ்சுகம் தனைக்காட்டி
அன்புமழை பெய்தாலும் (வந்து...)

கைபர்கணவாய்க்களின் கையாலாகாத்தனம்

இத்தனைக் காலமும் புழுதியினை வாரி, வாரி தூற்றியே புழுதியில் புதைந்துபோன புல்லறிவாளர்களின் புனிதர் புகலுகின்றார்; மக்கள் என்ற போர்வையில் மறைந்து கொண்டு, 'மத்திய புலனாய்வு துறையினர் தமிழக முதல்வர் மீது குற்றச் சாட்டுகளைத் தொகுத்துவிட்டனர்; அது வெளியிடப்படின் அவர் தப்பிக்க முடியாது' என்று.

அயோத்திய இராமனின் துதிபாடிகள் நேரிடையாகக் கருத்துக்களைப் சொல்லி வாதிட வக்கில்லாது, மக்கள் மன்றத்தில் சந்திக்க வகையில்லாது மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்ற போர்வையில் மறைந்துகொண்டு வாலியின் மீது மறைந்து நின்று அம்பு எய்த இராமனைப்போல் நம்மை நோக்கி விஷமத்தனம் நிறைந்த—விவேகமற்ற—அறிக்கையினை அம்பாக்கி எறிகிறார்கள்; எறிந்தும்இருக்கிறார்கள் ஆச்சாரியார் அவர்கள்,

அன்றைக்கு இராமனுக்கு சொல்லி மாளாத சிறப்பினை ஏற்றிய வால்மீகியைப் போல்—கம்பனைப்போல் இன்றைக்கு தள்ளாத ஆச்சாரியாருக்கு துள்ளாமல் துள்ளி அவாள் ஆனந்த விகடனும் அவரது ஆதாரமில்லாத—மக்கள் என்ற போர்வையில் மறைந்து கொண்டு விடப்பட்ட அறிக்கைக்கு பரிவட்டம் கட்டியிருக்கின்றது. அது துணையாகக் கொண்ட அணிகலன்களைப் பாருங்கள். "ஆச்சாரியார் எதுவும் ஆராயாமல் நிதானிக்காமல்—சிந்திக்காமல் சொல்வதில்லை அவர் முன்னாள் கவர்னர்-செனரல், முன்னாள் முதல்வர்" என்பன அவை. இவ்விதமெல்லாம் ஆச்சாரியாரின் வரலாற்றையே—குண நலன்களையே சுருக்கி தந்து சுநாதம் புரிந்திட வேண்டிய அப்படிப்பட்ட அவசியமான அவசரம் ஆனந்தவிகடனுக்கு,— அதுவும் கல்கி—சுவராஜ்யாவில் ஆச்சாரியாரின் அறிக்கை வந்த மறுநாளே ஏற்பட்ட மர்மம்தான் என்ன? இதைப்பற்றி மக்கள் பேசிக்கொள்வதை வெளியிட துணியுமா? எப்படித் துணியும் என்று எதிர் பார்ப்பது? அப்படி வெளியிடப்பட்டால் அது அவாளுக்குஎதிராக அல்லவா அமைய நேரிடும்!

ஆச்சாரியார் எப்படிப்பட்ட பொறுப்புகளை வகித்தவராக இருந்தால் என்ன? எத்தகைய குண நலன்களை கொண்டவராக இருந்தால் என்ன? ஒன்றை எழுத வரும் பொழுது—அதனால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளை எதிர் நோக்க துணிவில்லாது மக்கள் என்ற போர்வையில் மறைந்துகொள்ளும் பொழுது அத்தனையும் சொத்தையோ என எண்ணிடத்தான் முடிகின்றது.

இராமன் செயலை கம்பனும் வால்மீகியும் சிறப்பித்து எழுதியது போல் ஆனந்தவிகடனும் ஆச்சாரியாரைப் பற்றி அவ்விதம் சிறப்புகளை எடுத்தியம்பிய மர்மத்தைப் பற்றி அவாளுக்குத்தெரிந்த-

குடந்தை — சேது.

சொல்லத்-துணிவில்லாத ஒன்றை-மக்கள் பேசிக்கொள்ளும் அந்த அறிக்கை ஆச்சாரியாரால் எழுதப்பட்டிருக்காது; அப்படியே ஒரு வேளை எழுதப்பட்டிருந்தாலும் அது ஆச்சாரியாரின் தள்ளாத வயதில் தடுமாறிய சிந்தனையில் தறிகெட்டு பேனா ஓடிய ஓட்டமாகத்தான் இருக்கும்' என்ற கூற்றை நாங்கள் இங்கு செல்லப்போவதில்லை,

மேலும் அதே மக்கள், ஆச்சாரியாரின் இயல்பை—வகித்தப் பொறுப்புக்களை அவ்வறிக்கைக்குத் துணையாக நினைவூட்டி எழுதாமல் போனால், எங்கே மக்கள் பேசிக் கொள்வது உறுதிபட்டு, அதனால் கணவாய்களின் காப்பாளர் நிலை செல்லாக் காசாகி, சொல்லிக் கொள்ளப்படா ஒன்றாக ஆகி, தற்போது பரம்பரையினருக்கு வழிகாட்டி அறிக்கை விட்டு விஷமம் பண்ணுபவர் பின்னுக்கு தள்ளப்பட்டு விடுவாரோ என்ற இன அச்ச உணர்வால்தான் அவாள் ஆனந்தவிகடன் ஆச்சாரியாரின் அறிக்கை வந்த மறுநாளே துணை சென்றிருக்கின்றது' என்று பேசிக் கொள்வதையும் நாங்கள் இங்கு விளக்கமாகக் கூறப்போவதில்லை.

தமிழக முதல்வர் தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் "ஆச்சாரியாருக்கும் - ஆனந்தவிகடனுக்கும் ஆண்மையிருந்தால்—வீரம் படைத்த புருஷர்களென்றால் மத்திய புலனாய்வுத்துறை (சி. பி. ஐ.) யில் கருணாநிதியைப் பற்றியும் கழக அரசைப் பற்றியும் இப்படி ஓர் அறிக்கை இருக்கிறது; அதில் இன்னின்னது கூறப்பட்டிருக்கிறது அதை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று எழுதுவார்களா? அப்படி அவர்கள் எழுதுவார்களேயானால் அவர்களை நான் நீதி மன்றத்தில் சந்திப்பேன், அதை விடுத்து மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்று எழுதித் தப்பித்துக் கொள்ள நினைப்பது அரசியல் விவேகமுமல்ல-வீரமுமல்ல-நாகரீகமுமல்ல - நாணயமுமல்ல" - என்று தெளிவாக அறை கூவல் விடுத்துள்ளதை ஏற்க முன் வருமாறு கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் முன் வரமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அப்படிபட்ட பாரம்பரியத்-தினர் அல்ல.

மஞ்சள் ஏடுகள் மக்கள் பேசிக் கொள்வதாக தங்கள் எதிர்பார்ப்புகளையெல்லாம் வெளியிடுவதை வைத்து குற்றச்சாட்டு கூறுவதை விடுத்து ஆதாரத்தோடு சொல்வதை சொல்லுங்கள் எழுதுங்கள் என்று ஆச்சாரியார் போன்றவர்களையும் ஆனந்தவிகடனர்களையும் கேட்டுக்கொள்கின்றோம். இதே போக்கில் செல்லத்தான் செல்வோம் என்றால்......பரிதாபப்படுகின்றோம்.

★

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மணமக்களுக்கு ஒரு மகத்தான பரிசு.

தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்குவீர்.

ரூ. ஒரு லட்சம் பரிசு பெறக்கூடும்

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 7,00,000*

முதல் பரிசு: ஒரு லட்சம் ரூபாய்
(ஒவ்வொரு வரிசைக்கும்)

குலுக்கல் நாள்:
31-7-1972

பரிசுச் சீட்டு ஒன்றின்
விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2.
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9

*2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.